## பஞ்சாப் மாநில முதலமைச்சர்

# பகவந்த்மான் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, அக். 18–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களின் பிறந்த நாளையொட்டி சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

**தாங்கள் நல்ல உடல்நலத்துடனும், வலிவுடனும், எடுத்த செயலில் எல்லாம் வெற்றியுடனும் திகழ விழைகிறேன்.**

# அமைச்சரவை முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவர் ஆளுநர்!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, அக். 18–

கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள வீரபாரதி, தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்து வருவதாகவும், நன்நடத்தை அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி சிறைத்துறை டிஜிபி தலைமையிலான மாநிலகுழுவிடம் மனு அளித்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இதே குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்தவர் முன்கூட்டியே விடுதலை செய்யப் பட்டுள்ளதாகவும், உரியஆய்வு செய்தே மாநில அளவிலான குழு, முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக பரிந்துரை செய்த தன் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் ஆளுநர் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு ஒப்புதல் வழங்காமல் நிராகரித்து விட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த உத்தரவை ரத்து செய்து தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் எனவும் மனுவில் வீரபாரதி கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், வி.சிவஞானம் அமர்வு, பேரறிவாளன் உள்ளிட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, அமைச்சரவை முடிவுகளுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் என்றும், ஆளுநர் அதை மீற முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

இதில், ஆளுநருக்கு தனிப்பட்ட தார்மீக உரிமை இல்லை எனக் கூறி, முன்கூட்டியே விடுதலை செய்ய மறுத்த ஆளுநரின் உத்தரவை ரத்து செய்த நீதிபதிகள், மனுதாரரை முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரும் மனுவை மீண்டும் பரிசீலிக்க உத்தரவிட்டனர். அதுவரை அவருக்கு இடைக்கால ஜாமின் வழங்கியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.


# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.க. இளைஞர் அணி நடத்தும் **'என் உயிரினும் மேலான..!'** பேச்சுப் போட்டி மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது.

மாநில அளவிலான இறுதிப்போட்டி 19.10.2024 அன்றும், பரிசளிப்பு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 20.10.2024 அன்றும் சென்னையில் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம்.

தமிழ்நாடு முழுவதும் கனமழை பெய்துள்ள சூழலில், போட்டியாளர்களின் நலன் கருதி, இரு நிகழ்ச்சிகளையும் ஒத்தி வைத்துள்ளோம். மாநில அளவிலான இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அன்பகம்,**
சென்னை – 18.
நாள் : 17–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## ஆகாயத் தாமரை அகற்றம்: ஒரே நாளில் கோரிக்கையை நிறைவேற்றிய

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

## கீழ்கட்டளை - எஸ்.கொளத்தூர் பகுதி மக்கள் தெரிவித்தனர்!

**சென்னை, அக் 18–**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தங்கள் கோரிக்கையை உடனடியாக ஒரே நாளில் செயல்படுத்தியதற்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.10.2024 நள்ளிரவு தொடங்கி 15.10.2024 அதிகாலை 3.00 மணி வரை சென்னை மற்றும் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் அன்று பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட மழை நீர் வெளியேற்றும் பணிகளில் தூய்மை பணியாளர்கள், இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு சீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதை உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், கீழ்கட்டளை ஏரியில் இருந்து வரும் உபரி நீரானது பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரிக்கு கால்வாய் மூலம் வந்தடைகிறது. இங்கிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வழியாக நீரானது கடலை சென்றடையும். பள்ளிக்கரணை பகுதியில் கீழ்கட்டளை ஏரியிலிருந்து உபரி நீர் நாராயணபுரம் ஏரியை வந்தடைவதற்காக உள்ள கால்வாயின் மீது அம்பேத்கர் சாலை பாலம் அமைந்துள்ளது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.10.2024 அன்று மாலை பள்ளிக்கரணை எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பாலத்தின் இருபுறங்களிலும் நீர் செல்லும் வேகம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

துணை முதலமைச்சர் அவர்கள் 15.10.2024 அன்று அதிகாலை ஒரு மணியளவில் எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பாலத்தின் இருபுறங்களிலும் நீர் செல்லும் வேகம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பொதுமக்கள் கால்வாயில் ஆகாயத் தாமரை படர்ந்து நீரின் வேகத்தை குறைப்பதாகவும், முற்றிலும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் கோரிக்கை தெரிவித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.10.2024 அன்று மதியம் பள்ளிக்கரணை எஸ்.கொளத்தூர் அம்பேத்கர் சாலை பகுதி கால்வாயில் ஆகாயத்தாமரை முற்றிலும் அகற்றப்பட்டு, நீர் சீராக செல்வதை பார்வையிட்டார்.

அவர்களது கோரிக்கையை துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் தெரிவித்து உடனடியாக முழுமையாக ஆகாயத்தாமரையை அகற்றும் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பணிகளை முடுக்கி விட்டார்.

இதனையடுத்து நீர்வளத்துறை அலுவலர்கள் மிதவை அமைப்புடன் கூடிய பொக்லைன் இயந்திரங்கள் மூலம் கால்வாயில் ஆகாயத்தாமரையை அகற்றும் பணியில் மூழு வீச்சில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் 15.10.2024 அன்று மாலை மீண்டும் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள் மீதமுள்ள ஆகாயத்தாமரை அகற்றும் பணிகளை நாளைக்குள் முடிக்க அறிவுறுத்தினார்.

மறுநாள் 16.10.2024 அன்று மதியம் துணை முதலமைச்சர் அவர்கள் 100 மீட்டருக்கும் மேற்பட்ட மீதமுள்ள பகுதிகளில் ஆகாயத்தாமரை முற்றிலும் அகற்றப்பட்டு நீர் சீராக செல்வதை பார்வையிட்டார். அப்போது கோரிக்கை தெரிவித்திருந்த பொதுமக்கள் ஒரிரு நாட்களிலேயே விரைவாக சீரமைப்பு பணிகள் மேற்கொண்டதற்காக துணை முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர்.